1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர வர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, ஏழை எளியவர்கள் ஏன் அங்கே போகிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் போகாமல் இருப்பதற்காக நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் வரிசைகளில் சேர்க்கும் செயற்குறிப்பு.

*வினா எண் 502—**திரு. மு. ஜான் வின்செண்ட்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கல்லூரிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் (Teaching Staff) வரிசையில் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய விகிதத்தை (ரூ. 700-40—1,100-50-1,300-EB 50—1,600) போலவே கலைக் கல்லூரியில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கும் விரிவு படுத்தலாமா என்பதைப்பற்றி மத்திய அரசுடன் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடற் பயிற்சி இயக்குநர் பதவியினையும் நூலக ஆசிரியர் பதவியினையும் உதவிப் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தி அதற்குரிய சலுகைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக வைக்கப்பட்டும் இன்றுவரை அது நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இந்த கோரிக்கையினை இந்த அரசால் எப்போது நிறைவேற்ற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்தப் பதவி உயர்த்தப்படுகின்றபோது ஏற்படுகின்ற செலவினத்தில் 80 சதவீதத்தை 5 வருடத்திற்கு மத்திய அரசுதான் தர வேண்டும். அவர்கள் தருவதற்கு ஒப்புக்கொண்டால்தான் முடியும். ஆகவே அவர்களிடத்திலே சொல்லி நாம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்லி அதன்பிறகு அவர்கள் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியதற்கு பிறகு அமுலுக்கு வரும். இப்போதுதான் நம்முடைய ஒப்புதலைத்

தெரிவித்து இருக்கிறோம். ஆகவே அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தந்துவிடுவார்களேயானால் இது அமுலுக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, கல்லூரிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் பதவிக்கு எம்.ஏ., பி.எட். பட்டம் படித்தவர்களைத் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, டீ.பி.எட், படித்தவர்களுக்கு உயர்நிலைப்பள்ளியிலும் இடம் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும் இடம் கிடைப்பதில்லை. இந்த நிலைமையிலே அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுயாட்சி பெற்ற கல்லூரிகள்.

* வினா எண் 503— திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளுக்கு சுயாட்சி முறை வழங்குவது எந்த அடிப்படையில்?

(ஆ) சுயாட்சி பெற்ற கல்லூரிகளுக்கு அரசு விசேஷ உதவி ஏதும் செய்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் நிலைபெற்று பல்கலைக் கழகத்துடன் நிரந்தரமான இணைப்பு பெற்ற ஒரு கல்லூரி பல்கலைகழக நாட்குறிப்பேட்டின் இருபத்தாறாம் அத்தியாயம் 9 (எ) விதியின்படி குறிப்பிட்ட பாட வகுப்புக்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட தகுதியுடையதாகிறது.

(ஆ) தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பாக எந்த விதமான மானியக் கொடையையும் வழங்கவில்லை.

கதர், கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண் 504— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). 1980–81–ம் நிதியாண்டில் எவ்வளவு கதர் துணிகள் மற்றும் கைத்தறித்துணிகள் விற்கப்பட்டன?